## நம்மாழ்வார் திருவாய் மலர்ந்தருளிய
# திருவாய்மொழி 10-3 - வேய்மருதோள்
**(தலைவி தலைவனது பிரிவுக்கு இரங்கிய பாசுரத்தாலே, இன்னும் பரமபதம் அருளாமையால், 'என்னை இந்தப் பூமியிலே வைத்து விடுவனோ' என்று சங்கித்து, திருமால் தெளிவிக்கத் தெளிதல்)**

3689 * வேய்மரு தோளிணை மெலியுமாலோ! *
மெலிவும் என் தனிமையும் யாதும் நோக்கா *
காமரு குயில்களும் கூவுமாலோ! *
கணமயில் அவை கலந்தாலுமாலோ! **
ஆமருவினநிரை மேய்க்க நீ போக்கு *
ஒரு பகல் ஆயிரம் ஊழியாலோ! *
தாமரைக் கண்கள் கொண்டு ஈர்தியாலோ! *
தகவிலை தகவிலையே நீ கண்ணா! 1

3690 தகவிலை தகவிலையே நீ கண்ணா! *
தடமுலை புணர் தொறும் புணர்ச்சிக்காரா *
சுகவெள்ளம் விசும்பிறந்து அறிவை மூழ்க்கச்
சூழ்ந்து * அது கனவென நீங்கியாங்கே **
அகவுயிர் அகமகந்தோறும் உள்புக்கு *
ஆவியின் பரமல்ல வேட்கை அந்தோ! *
மிக மிக இனி உன்னைப் பிரிவையாமால் *
வீவ நின் பசு நிரை மேய்க்கப் போக்கே 2

3691 வீவ நின் பசு நிரை மேய்க்கப் போக்கு *
வெவ்வுயிர் கொண்டு எனதாவி வேமால் *
யாவரும் துணை இல்லை யான் இருந்து *
உன் அஞ்சன மேனியை ஆட்டம் காணேன் **
போவதன்று ஒரு பகல் நீ அகன்றால் *
பொருகயற் கண்ணிணை நீரும் நில்லா *
சாவது இவ்வாய்க்குலத்து ஆய்ச்சியோமாய்ப்
பிறந்த * இத்தொழுத்தையோம் தனிமை தானே 3

3692 தொழுத்தையோம் தனிமையும் துணை பிரிந்தார்
துயரமும் * நினைகிலை கோவிந்தா! * நின்
தொழுத்தனிற் பசுக்களையே விரும்பித் *
துறந்து எம்மை இட்டு அவை மேய்க்கப் போதி **
பழுத்த நல்லமுதின் இன்சாற்று வெள்ளம் *
பாவியேன் மனம் அகந்தோறும் உள்புக்கு
அழுத்த * நின் செங்கனி வாயின் கள்வப்
பணிமொழி * நினைதொறும் ஆவி வேமால் 4

3693 பணிமொழி நினைதொறும் ஆவி வேமால் *
பகல் நிரை மேய்க்கிய போய கண்ணா! *
பிணியவிழ் மல்லிகை வாடை தூவப் *
பெருமத மாலையும் வந்தின்றாலோ![1] **
மணிமிகு மார்வினின் முல்லைப் போது * என்
வனமுலை கமழ்வித்து உன் வாயமுதம் தந்து *
அணிமிகு தாமரைக் கையை அந்தோ! *
அடிச்சியோம் தலை மிசை நீ அணியாய் 5

3694 அடிச்சியோம் தலை மிசை நீ அணியாய் *
ஆழியங்கண்ணா! உன் கோலப் பாதம் *
பிடித்தது நடு உனக்கு அரிவையரும்[2]
பலர் * அது நிற்க எம் பெண்மை ஆற்றோம் *
வடித்தடங்கண்ணிணை நீரும் நில்லா *
மனமும் நில்லா எமக்கு அது தன்னாலே *
வெடிப்பு நின் பசு நிரை மேய்க்கப் போக்கு *
வேம் எமதுயிர் அழல் மெழுகிலுக்கே 6

3695 வேம் எமதுயிர் அழல் மெழுகிலுக்கு *
வெள்வளை மேகலை கழன்று வீழ *
தூமலர்க் கண்ணிணை முத்தம் சோரத் *
துணைமுலை பயந்து என தோள்கள் வாட *
மாமணி வண்ணா! உன் செங்கமல
வண்ண * மென்மலரடி நோவ நீ போய் *
ஆமகிழ்ந்துகந்து அவை மேய்க்கின்று உன்னோடு *
அசுரர்கள் தலைப்பெய்யில் எவன் கொல் ஆங்கே? 7

3696 அசுரர்கள் தலைப்பெய்யில் எவன் கொல் ஆங்கென்று *
ஆழும் என் ஆருயிர் ஆன்பின் போகேல் *
கசிகையும் வேட்கையும் உள்கலந்து *
கலவியும் நலியும் என் கைகழியேல் **
வசிசெய் உன் தாமரைக் கண்ணும் வாயும் *
கைகளும் பீதக உடையும் காட்டி *
ஒசிசெய் நுண்ணிடை இளவாய்ச்சியர் *
நீ உகக்கும் நல்லவரொடும் உழி தராயே 8

3697 உகக்கு நல்லவரொடும் உழி தந்து *
உன்தன் திருவுள்ளம் இடர் கெடுந்தோறும் * நாங்கள்
வியக்க இன்புறுதும் எம் பெண்மை ஆற்றோம் *
எம்பெருமான்! பசு மேய்க்கப் போகேல் **

[1] வந்தன்றாலோ
[2] அரிவைமாரும்

மிகப் பல அசுரர்கள் வேண்டுருவம்
　　கொண்டு * நின்று உழி தருவர் கஞ்சன் ஏவ *
அகப்படில் அவரொடும் நின்னொடு ஆங்கே *
　　அவத்தங்கள் விளையும் என் சொற்கொள் அந்தோ! 9

3698 அவத்தங்கள் விளையும் என் சொற்கொள் அந்தோ! *
　　அசுரர்கள் வன்கையர் கஞ்சன் ஏவ *
தவத்தவர் மறுக நின்று உழி தருவர் *
　　தனிமையும் பெரிது உனக்கு இராமனையும்
உவர்த்தலை ** உடன் திரிகிலையும் என்றென்று
　　ஊடுற * என்னுடை ஆவி வேமால் *
திவத்திலும் பசு நிரை மேய்ப்பு உவத்தி *
　　செங்கனிவாய் எங்கள் ஆயர் தேவே! 10

3699 * செங்கனிவாய் எங்கள் ஆயர் தேவு *
　　அத்திருவடி திருவடி மேல் * பொருநல்
சங்கணி துறைவன் வண்தென்குருகூர் *
　　வண்சடகோபன் சொல் ஆயிரத்துள் **
மங்கையர் ஆய்ச்சியர் ஆய்ந்த மாலை *
　　அவனொடும் பிரிவதற்கு இரங்கி * தையல்
அங்கவன் பசு நிரை மேய்ப்பொழிப்பான்
　　உரைத்தன * இவையும் பத்து அவற்றின் சார்வே 11

**அடிவரவு:** வேய் தகவு வீவ தொழுத்தை பணி அடிச்சியோம்
　　வேம் அசுரர் உகக்கு அவத்தம் செங்கனி சார்வு